# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1816/37 - 2013 ජුනි මස 28 වැනි සිකුරාදා - 2013.06.28

*1816/37 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 14/2008.*

### கடல்சார் தீழ்ப்புத் தடுப்புச் சட்டம்

*2008 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, கடல்சார் தீழ்ப்புத் தடுப்புச் சட்டத்தின் 27 ஆம், 28 ஆம் பிரிவுகளுடன் சேர்த்துவாசிக்கப்படும் அதன் 51 ஆம் பிரிவின் கீழ் சூழல் மற்றும் புதுப்பிக்கத்தக்க வலு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

சுசில் பிரேமஜயந்த,
சூழல் மற்றும் புதுப்பிக்கத்தக்க வலு அமைச்சர்.

சூழல் மற்றும் புதுப்பிக்கத்தக்க வலு அமைச்சு,
கொழும்பு,
*2013, யூன் 12.*

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2013 ஆம் ஆண்டின் ............. ஆம் இலக்க, கடல்சார் சூழற் பாதுகாப்பு (கடலில் கொட்டுவதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஆளெவரும், அதற்கென அதிகாரசபையினால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரமொன்றின் அதிகாரத்தின்கீழன்றி, இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளிலுள்ள அல்லது வேறேதேனும் கடலோர வலயத்தினுள், அதன் முற்கரையினுள் மற்றும் இலங்கையின் கரையோர வலயத்தினுள் பின்வருவனவற்றைக் கொட்டுதலாகாது :-

(அ) எவையேனும் தீங்கு விளைவிக்கும் பதார்த்தங்கள் ;

(ஆ) அட்டவணை I இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் தீழ்ப்பாக்கி அத்துடன் பின்வருவனவற்றையும் உள்ளடக்குகின்றது:-

(i) II ஆம் அட்டவணையிற் குறிப்பீடு செய்யப்படும் தூர்வாரப்பட்ட பொருட்கள், கழிபொருள் மண்டி, மீன் கழிவுகள் அல்லது கைத்தொழில்சார் மீன் பதனிடுதல் தொழிற்பாடுகளிலிருந்து விளைகின்ற பொருட்கள் ;

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.



2- PG 001665

(ii) சடத்துவமான, அசேதன புவிவரலாற்றியல்சார் பொருட்கள், இயற்கையான மூலத்தினைக்கொண்ட சேதனப்பொருட்கள் ;

(iii) இரும்பு, உருக்கு, கொங்கிறீற்று மற்றும் இவற்றையொத்த தீங்குவிளைவிக்காத பொருட்களைப் பிரதானமாகக் கொண்டுள்ள இனங்கள் ;

(iv) கப்பல்கள், வானூர்திகள், மேடை அல்லது மனிதனினால் ஆக்கப்பட்ட வேறு கட்டமைப்புகள் ;

(v) இவ்வொழுங்குவிதிகளுக்கான III ஆம் அட்டவணையிற் குறிப்பீடு செய்யப்பட்ட கழிவுகள்.

3. இவ்வொழுங்குவிதிகளுக்கான IV ஆம் அட்டவணையிற் குறிப்பீடு செய்யப்பட்ட பதார்த்தங்களை இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளினுள் அல்லது வேறேதேனும் கடலோர வலயத்தினுள், அதன் முற்கரையினுள் மற்றும் இலங்கையின் கரையோர வலயத்தினுள் கொட்டுதல் அதிகாரசபையினால் தடை செய்யப்படுதல் வேண்டும்.

4. (1) கொட்டுதல் அனுமதிப்பத்திரத்துக்கான விண்ணப்பமொன்று இவ்வொழுங்கு விதிகளுக்கான V ஆம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் அதிகாரசபைக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

(2) நான்காம் ஒழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் கீழ் செய்யப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வருவனவற்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும் :-

(அ) VI ஆம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட விண்ணப்பக் கட்டணம் ;

(ஆ) கொட்டப்படவுள்ள பொருள்பற்றி அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளத்தக்க நிறுவனமொன்றினாலான பரீட்சிப்புச் சான்றிதழ் அல்லது பகுப்பாய்வறிக்கை ;

(இ) கொட்டப்படுவதற்கு உத்தேசிக்கப்படுகின்ற பொருளின் மாதிரியொன்று ;

(ஈ) கொட்டுதல் தவிர்ந்த வேறு மாற்று அகற்றுகை முறைகள் கிடைக்கக் கூடியமை பற்றிய மதிப்பீடொன்று ;

(உ) கொட்டப்படவுள்ள தீங்குவிளைவிக்கும் பதார்த்தத்தின் அல்லது தீழ்ப்பாக்கியின் பூரணமான விவரணமும் பண்புக்கூறும் ;

(ஊ) உத்தேசிக்கப்பட்ட கொட்டுமிடத்தின் விவரங்களும் கொட்டுதல் தொழிற்பாட்டின் உத்தேசிக்கப்பட்ட திகதியும், நேரமும் கால எல்லையும் ;

(எ) கொட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்ட பொருளின் தரமும், வகையும், மூலமும் ;

(ஏ) கொட்டுதலின் உத்தேசிக்கப்பட்ட முறை ;

(ஐ) பின்வருவனவற்றின் மீது கொட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்ட பொருட்களின் சூழல்சார் தாக்கங்கள் பற்றிய மதிப்பீடொன்று :-

(i) கடல்சார், கரையோர, துறைமுக கடற்றொழில் அல்லது பொங்குமுகச் செயற்பாடுகள் ;

(ii) இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளில் அல்லது வேறேதேனும் கரையோர வலயத்தில் அல்லது கடற்கரைகளும் முருகைக்கற்பார்த் தொடர்களும் உட்பட, முற்கரையில் சுற்றுலாப் பயணத்துறையை மேம்படுத்துதலும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடங்களைப் பேணிக்காத்தலும் அபிவிருத்தி செய்தலும் ;

(iii) சமுதாயத்தின் உடனலமும் நல்வாழ்வும் ;

(iv) உயிருள்ள கடல்சார் மூலவளங்களும் வனசீவராசிகளும் ;

(v) கப்பல்களின் கடற்செலவு ;

(ஒ) கண்காணித்தல் பற்றிய உத்தேசிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் விவரங்களும் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்துடன் இணங்கியொழுகுதலும் கடல்சார் சூழலைப் பாதுகாப்பதற்குக் கடைப்பிடிக்கப்பட்ட நடவடிக்கைமுறைகளின் விவரங்களும்;

(ஓ) கொட்டுதலில் பயன்படுத்தப்படவுள்ள கலன் எந்தக் கொடியின் கீழ் பிரயாணஞ்செய்கின்றதோ அந்தக் கொடி உட்பட, கொட்டுதலில் பயன்படுத்தப்படவுள்ள உத்தேசிக்கப்பட்ட கலன்பற்றிய விவரங்கள் ;

(ஔ) நடைமுறையிலுள்ள கடற்செல் தகுதிச்சான்றிதழ் ; அத்துடன்

(க) குழாய்வழிகளினூடாகக் கொட்டும் விடயத்தில், அதன் பரிமாணங்களும் உத்தேசிக்கப்பட்ட வெளியேற்றுகை வேகமும் உட்பட, அத்தகைய குழாய்வழிகள் தொடர்பான விவரங்கள்.

(3) ஒவ்வொரு விண்ணப்பமும், உத்தேசிக்கப்பட்ட கொட்டுதலைத் தொடங்குவதற்கு முன்னர் முப்பது நாட்களினுள் எழுத்தில் அதிகாரசபைக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

(4) (அ) விண்ணப்பத்தைப் பெற்றுக்கொண்டதன்மேல், அதிகாரசபையானது, சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் பொது விடுமுறை நாட்கள் நீங்கலாக வேலை மணித்தியாலங்களின் போது விண்ணப்பத்தைச் செய்முறைப்படுத்துதல் வேண்டும் ;

(ஆ) ஏதேனும் வேலைநாளன்று பி. ப. 3.00 மணிக்குப் பின்னர் பெறப்பட்ட ஏதேனும் விண்ணப்பம், அடுத்துவரும் வேலை நாளன்று பெறப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) அதிகாரசபையானது, கொட்டுவதற்கான அனுமதிப்பத்திரமொன்றை வழங்கும் நோக்கத்துக்காக விண்ணப்பத்தை மதிப்பீடு செய்வதற்கு அவசியமென அது கருதக்கூடியவாறான ஏதேனும் மேலதிகத் தகவலை வழங்கும்படி விண்ணப்பகாரரை எழுத்தில் தேவைப்படுத்தலாம்.

5. (1) அதிகாரசபையானது, பின்வருவனவற்றுக்கமைய, அனுமதிப்பத்திரத்துக்கான ஒவ்வொரு விண்ணப்பத்தையும் மதிப்பீடு செய்தல் வேண்டும்.

(அ) சட்டத்தின் 29 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ; அத்துடன்

(ஆ) சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்பினால் (சகஒ) அல்லது இலங்கை தவிர்ந்த அரசொன்றின் தேசிய கடல்சார் சூழற் பாதுகாப்பு ஒழுங்கமைப்பொன்றினால் காலத்துக்குக்காலம் வழங்கப்பட்டு வெளியிடப்படக்கூடியதும், கொட்டுதல் தொடர்பானதுமான வேறேவையேனும் வழிகாட்டுநெறிகள்.

(2) அதிகாரசபையானது, அதன் முடிபுபற்றி, அதிகாரசபையினால் விண்ணப்பம் பெறப்பட்ட திகதியிலிருந்து முப்பது நாட்களினுள் விண்ணப்பகாரருக்கு அறிவித்தல் வேண்டும்.

(3) கொட்டுதல் அனுமதிப்பத்திரத்துக்கான விண்ணப்பம் அனுமதிக்கப்படுமிடத்து, இதற்கான VI ஆம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவாறான அனுமதிப்பத்திரக் கட்டணத்தை விண்ணப்பகாரர் செலுத்துதல் வேண்டுமென்பதுடன், இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளில் அல்லது வேறேதேனும் கடலோர வலயத்தில், அதன் முற்கரையில் மற்றும் இலங்கையின் கரையோர வலயத்தில் உயிருள்ள இனங்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கமைய, அதிகாரசபையானது இதற்கான VII ஆம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவாறான அனுமதிப்பத்திரத்தை வழங்குதலும் வேண்டும்.

(4) வழங்கப்பட்ட ஒவ்வோர் அனுமதிப்பத்திரமும் கோரப்பட்டதன்மேல் அதிகாரசபைக்கு அல்லது அதிகாரசபையினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளுக்குக் காண்பிக்கப்படுதல் வேண்டும்.

6. (1) அத்தகைய அனுமதிப்பத்திரத்தை வழங்குதல், அத்தகைய ஆள்புல நீர்ப்பரப்புகளில் அல்லது வேறேதேனும் கடலோர வலயத்தில், அதன் முற்கரையில் மற்றும் இலங்கையின் கரையோர வலயத்தில் இருக்கும் எவையேனும் உயிருள்ள இனங்களுக்குத் தீங்குவிளைவிக்கும், அல்லது நீரின் தரத்தின்மீது தாக்கமொன்றைக் கொண்டிருக்கும் அல்லது ஏதேனும், கடல்சார் செயற்பாட்டை நிலைகுலையச் செய்யும் என அதிகாரசபை அபிப்பிராயப்படுமிடத்து, அனுமதிப்பத்திரமொன்றை வழங்க மறுத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய முடிபை விண்ணப்பகாரருக்கு உடனடியாக அறிவித்தலும் வேண்டும்.

(2) அதிகாரசபையின் முடிபினால் இன்னலுறும் எவரேனுமாள், அத்தகைய முடிபு விண்ணப்பகாரருக்கு அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து முப்பது நாட்களினுள் அம்முடிபுக்கெதிராகக் கடல்சார் தீழ்ப்பு என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(3) செயலாளர், (2) ஆம் பந்தியின் கீழ் செய்யப்பட்டவொரு மேன்முறையீட்டின் மேல் –

(அ) மேன் முறையீட்டை அனுமதிக்கலாமென்பதுடன், எந்த அதிகாரசபையின் முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்பட்டதோ அந்த அதிகாரசபையை அனுமதிப்பத்திரத்தை வழங்கும்படி பணிக்கலாம் ; அல்லது

(ஆ) மேன்முறையீட்டுக்கு அனுமதி மறுக்கலாம்.

(4) அதிகாரசபையானது, (3) ஆம் பந்தியின் கீழ் அதற்கு வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

7. (1) அதிகாரசபையானது பின்வருவனவற்றை ஒவ்வோர் அனுமதிப்பத்திரத்திலும் குறித்துரைத்தல் வேண்டும் :-

(அ) கொட்டப்படவுள்ள தீங்குவிளைவிக்கும் பதார்த்தத்தின் அல்லது வேறு தீழ்ப்பாக்கியின் வகைகள், மூலங்கள் மற்றும் அளவுகள் ;

(ஆ) கொட்டுமிடத்தின் அமைவிடம் ;

(இ) கையாள்வதற்கான எவையேனும் அகற்றுகை முகாமைத்துவத் தொழினுட்பங்கள் உட்பட, கொட்டும் முறை;

(ஈ) கொட்டுதலின் திகதியும் நேரமும், கொட்டப்படவுள்ள தீங்கு விளைவிக்கும் பதார்த்தத்தில் அல்லது தீழ்ப்பாக்கியில் உள்ள மாசுபடுத்திகள் பற்றிய விபரங்களும் ;

(உ) எந்த அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் முன்னிலையில் அத்தகைய கொட்டுதல் இடம்பெறவேண்டுமோ அந்த அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர் ; அத்துடன்

(ஊ) அதிகாரசபை தோதானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய வேறு நிபந்தனை.

(2) அதிகாரசபையினால் வழங்கப்பட்ட ஒவவோர் அனுமதிப்பத்திரமும், அவ்வனுமதிப்பத்திரத்திற் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்துக்காகவும் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட நாளன்றும் நேரத்தின்போதும் மட்டுமே பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) ஐந்தாம் பந்தியின் (3) ஆம் உட்பந்தியின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமெதுவும் வேறெவரேனுமாளுக்குக் கைமாற்றப்படற்பாலதாதலாகாது.

(4) பின்வரும் சந்தர்ப்பங்களில் முப்பது நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு அனுமதிப்பத்திரமொன்று அதிகாரசபையினால் இல்லாதாக்கப்படலாம் அல்லது இடைநிறுத்தப்படலாம் :-

(அ) சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடு அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி அல்லது அனுமதிப்பத்திரம் எந்த நிபந்தனைக்கமைய வழங்கப்படுகின்றதோ அந்த ஏதேனும் நிபந்தனை மீறப்படுமிடத்து அல்லது அதிகாரசபையினால் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கு இணங்கியொழுகப்படாதவிடத்து ;

(ஆ) அதிகாரசபைக்குக் கொடுத்துதவப்பட்ட எவையேனும் விவரங்கள் பொய்யானவையாக அல்லது செம்மையற்றவையாக இருக்குமிடத்து அல்லது இயைபான ஏதேனும் தரவு ஒடுக்கப்படுமிடத்து ;

ஆயின், எவ்வாறாயினும், ஓர் அனுமதிப்பத்திரம் இல்லாதாக்கப்படுவதற்கு அல்லது இடைநிறுத்தப்படுவதற்கு முன்னர், அது எந்த ஆளுக்கு வழங்கப்பட்டதோ அந்த ஆளுக்கு அதிகாரசபையானது விசாரிக்கப்படுவதற்கான சந்தர்ப்பமொன்றை அளித்தல் வேண்டும்.

(5) அதிகாரசபையானது, அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட நேரத்தில், தீங்குவிளைவிக்கும் பதார்த்தங்களினால் அல்லது வேறேதேனும் தீழ்ப்பாக்கியினால் தீழ்பாக்கப்படுவதிலிருந்து பாதுகாக்கப்பட்டனவாகக் கருதப்படுகின்ற விசேட இடப்பரப்புகளைப் பெயர் குறிக்கலாமென்பதுடன். அத்தகைய இடப்பரப்பில் 2 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட பதார்த்தங்கள் கொட்டப்படுதலைத் தடை செய்தலும் வேண்டும்.

8. (1) அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் ஒவ்வொருவரும், அதிகாரசபையின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரைப் பின்வருமாறு செய்வதற்கு அனுமதித்தல் வேண்டும் :-

(அ) கொட்டப்படவேண்டிய தீங்குவிளைவிக்கும் பதார்த்தம் அல்லது தீழ்ப்பாக்கி தோற்றுவிக்கப்படும் அல்லது களஞ்சியப்படுத்தப்படும் அல்லது கொட்டப்படுவதற்கு முன்னர் தயார் நிலையில் பொதியிடப்படும் வளவுகளுக்கான அணுகுகையைக் கொண்டிருப்பதற்கும் ;

(ஆ) பொறித்தொகுதியிலிருந்து, சாதனத்திலிருந்து அல்லது தொடர்புபட்ட முறைமையிலிருந்து அல்லது அதன்மூலம் வெளியகற்றப்படும். வெளியேற்றப்படும் அல்லது படியவிடப்படும் ஏதேனும தீங்குவிளைவிக்கும் பதார்த்தத்தின் அவ்லது தீழ்ப்பாக்கியின் மாதிரிகளை எடுப்பதற்கும் ;

(இ) இயைபான பதிவேட்டுப்புத்தகங்களை அல்லது ஆவணங்களைப் பரிசோதனை செய்வதற்கும் அத்தகைய பரிசோதனையின் போது காணப்பட்ட எவையேனும் புத்தகங்களின் அல்லது ஆவணங்களின் பிரதிகளை எடுப்பதற்கும் ;

(ஈ) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அவசியமெனக் கருதக்கூடியவாறாக இடத்தின் நிழற்படங்களை எடுப்பதற்கும் ; அத்துடன்

(உ) கொட்டப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட தீழ்ப்பாக்கியின் மாதிரிகளை எடுப்பதற்கும் .

(2) ஒவ்வோர் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரும் பின்வருவன தொடர்பாக அதிகாரசபையினால் காலத்துக்குக்காலம் அறிவிக்கப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும் :-

(அ) சூழல்சார் தீழ்பாக்குதலையும் ஆபத்துக்களையும் மிகக் குறைந்தனவாக்கும் கருத்துடன், பொதியிடும் அல்லது கொட்டும் செய்முறைக்காக ஏதேனும் தொழினுட்பத்தை அல்லது முறையைப் பயன்படுத்துதல் ; அத்துடன்

(ஆ) கடல்சார் சூழல் தீழ்ப்பாக்குதலையும் ஆபத்துக்களையும் தடுக்கும் அல்லது குறைக்கும் நோக்கத்துக்கான வேறேதேனும் தொழினுட்ப வழிமுறை .

(3) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், இவ்வொழுங்குவிதியின் (1) (ஆ) என்னும் உட்பந்தியின் கீழ் பரீட்சிக்கப்பட்ட மாதிரிபற்றி எழுத்திலான அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறிக்கையையும் அனுமதிப்பத்திரத்தையும் கப்பலில் துலாம்பரமானவோரிடத்தில் அல்லது அதிகாரசபையினால் தீர்மானிக்கப்பட்ட வேறேதேனுமிடத்தில் வெளிக்காட்டிவைப்பதனைச் செய்வித்தலும் வேண்டும்.

(4) ஒவ்வோர் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரும், தீங்குவிளைவிக்கும் பதார்த்தத்தை அல்லது வேறு தீழ்ப்பாக்கியைக் கொட்டுதல் பூர்த்தியாக்கப்படுவதன்மேல், கொட்டுதலிருந்து ஏழு நாட்களினுள் அல்லது அதிகாரசபையினால் தேவைப்படுத்தப்பட்டவாறாகக் காலத்துக்குக்காலம் இதற்கான VIII ஆம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவாறான அறிக்கையொன்றை அதிகாரசபையிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(5) ஒவ்வோர் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரும், அனுமதிப்பத்திரத்தின் நியதிநிபந்தனைகளின்கீழ் தொழிற்படுகையில் ஏதேனும் விஞ்சுதலான எண்ணெய் வடிதலை உட்படுத்துகின்ற ஏதேனும் விபத்தை அல்லது சம்பவத்தை அதிகாரசபைக்கு அறிவிப்பதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

9. (1) விண்ணப்பகாரரொருவர், 4 (1) ஆம் ஒழுங்குவிதிக்கிணங்க அவசர நிலைமையில் தீங்குவிளைவிக்கும் பதார்த்தங்களை அல்லது தீழ்ப்பாக்கியைக் கொட்டுவதற்கான அவசரகால அனுமதிப்பத்திரமொன்றுக்காக அதிகார சபைக்கு விண்ணப்பிக்கலாம்.

(2) அதிகாரசபையானது, 5 ஆம் ஒழுங்குவிதிக்கிணங்க விண்ணப்பத்தை மதிப்பீடு செய்தபின்னர், பின்வரும் சந்தர்ப்பங்களில் அவசரகால அனுமதிப்பத்திரத்தை வழங்குதல் வேண்டும்.

(அ) மனித உடனலம், பாதுகாப்பு அல்லது கடல்சார் சூழல் தொடர்பான ஏற்றுக்கொள்ள முடியாத அபாயமொன்றை ஏற்படுத்துகின்ற அவசர நிலைமையினால் கொட்டுதல் அவசியமாக்கப்படுகின்றவிடத்தும் வேறு சாத்தியமான மாற்று வழியெதனையும் காண முடியாமலிருக்குமிடத்தும் ;

(ஆ) இலங்கையிலுள்ள அல்லது அத்தகைய கொட்டுதலின்மூலம் பாதிக்கப்படும் சாத்தியங்கொண்ட வேறேதேனும் நாட்டின் தோதான எவரேனும் தகுதிவாய்ந்த அதிகாரியுடன் அதிகாரசபை அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய கலந்தாலோசனையின் பின்னரும் ;

(இ) அவசரகால அனுமதிப்பத்திரத்துக்கான விண்ணப்பம்பற்றி சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்புக்கு அறிவித்தபின்னரும், அத்துடன்

(ஈ) கடல்சார் சூழலுக்குச் சேதம் ஏற்படுவதனைத் தவிர்ப்பதற்குத் தோதான நடவடிக்கை முறைகளின் முறையான பிரயோகத்தை உறுதிப்படுத்துதற்கு சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்பின் (சகஒ) மற்றும் வேறேதேனும் சர்வதேச ஒழுங்கமைப்பின் விதப்புரைகளைக் கருத்திற்கொண்டும் .

(3) இரண்டாம் உட்பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அதிகார சபையானது, அவசரகால அனுமதிப்பத்திரமொன்றை வழங்குவதில் தேசிய நலன்களைக் கருத்திற்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன், கொடி அரசினதும் வேறு எவரேனும் ஆளினதும் அல்லது நாட்டினதும் உரிமைகளைப் பங்கப்படுத்துதலுமாகாது.

10. சட்டத்தின் 27 ஆம் பிரிவினதும், 53 ஆம் பிரிவினதும் ஏற்பாடுகள் பின்வருவன தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும் :-

(அ) அனுமதிப்பத்திரமொன்றைப் பெறாமல் ஏதேனும் கொட்டுதல் செயற்பாட்டின் நிறைவேற்றுகை ; அல்லது

(ஆ) இவ்வொழுங்குவிதிகளின் ஏதேனும் மீறுகை.

11. இவ்வொழுங்குவிதிகளில் :-

"சட்டம்" என்பது, 2008 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, கடல்சார் தீழ்ப்புத் தடுப்புச் சட்டம் என்று பொருளாகும்.

"அதிகாரசபை" என்பது, இலங்கைக் கடல்சார் சூழற் பாதுகாப்பு அதிகாரசபை என்று பொருளாகும்.

"கொட்டுதல்" என்பது, (அ) கழிவு அல்லது வேறு பருப்பொருள் தொடர்பாக, அதனை வேண்டுமென்று அகற்றுதல் ; அத்துடன்

(ஆ) ஒரு கப்பல், வானூர்தி அல்லது ஒரு கரைகடந்த நிறுவுகை தொடர்பாக, அதனை வேண்டுமென்று அகற்றுதல் அல்லது கைவிடுதல் ,

என்று பொருளாகும் ஆனால் ஒரு கப்பலின், வானூர்தியின் அல்லது கரைகடந்த நிறுவுகையின் வழமையான தொழிற்பாடுகளின் இடைநேர்விளைவான அல்லது அவற்றிலிருந்து பெறப்பட்ட கழிவின் அல்லது வேறு பருப்பொருளின் அகற்றுகையை, அத்தொழிற்பாடுகளின் நோக்கங்கள் அக்கழிவின் அல்லது வேறு பருப்பொருளின் அகற்றுகையை அல்லது பரிகரிப்பை அல்லது அகற்றுகைக்கான இடப்பெயர்வை உள்ளடக்காவிடின், உள்ளடக்காது ;

"தீங்குவிளைவிக்கும் பதார்த்தம்" என்பது, கடலினுட் செலுத்தப்படின், மனித உடனலத்துக்கு ஆபத்துக்களை உருவாக்குவதற்கு, உயிருள்ள மூலவளங்களுக்கும் கடல்சார்

உயிரினங்களுக்கும் தீங்குவிளைவிப்பதற்கு, வாழ்வசதிகளுக்குச் சேதம் ஏற்படுத்துவதற்கு அல்லது கடலின் வேறு சட்டமுறையான பயன்பாடுகளுடன் தலையிடுவதற்கு உட்பட்டதாகவுள்ள ஏதேனும் பதார்த்தம் என்று பொருளாகும் ;

''கரைகடந்த நிறுவுகை'' என்பது, ஏதேனும் கனிப்பொருளை அகழ்ந்துதேடும் அல்லது பயன்படுத்தும் அல்லது அதனோடு இணைந்த பதனிடும் நோக்கத்துக்காகக் கடற்படுக்கையில் அல்லது அதன்மீது பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தப்படுவதற்கு உட்கருதப்படும் அல்லது அதனோடு நங்கூரமிடப்படும் அல்லது இணைக்கப்படும் ஏதேனும் செயற்கைக் கட்டமைப்பை (ஒரு கப்பல் தவிர்ந்த மிதக்கும் கட்டமைப்பொன்றுட்பட) உள்ளடக்கும், ஆனால் ஒரு குழாய் வழியை உள்ளடக்காது ;

''ஆள்'' என்பது, ஒரு கப்பலின் அல்லது கரைகடந்த நிறுவுகையின் அல்லது குழாய்வழியின் சொந்தக்காரர் அல்லது தொழிற்படுத்துநர் அல்லது ஒரு சேவை வழங்குநராகக் கொட்டுதற் செயற்பாடுகளைப் பொறுப்பேற்பதற்கு அதிகாரசபையினால் அதற்கென எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனுமாள் என்று பொருளாகும்.

''கதிரியக்கக் கழிவு அல்லது வேறு கதிரியக்கப் பருப்பொருள்'' என்பது, தீங்குவிளை விப்பதாகவுள்ளதும் இலங்கையின் நலனுக்கெதிராகவுள்ளதுமான ஏதேனும் கதிரியக்கப் பொருளைக் கொண்டுள்ள ஏதேனும் கழிவு அல்லது வேறு பருப்பொருள் என்று பொருளாகும் ;

''இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகள்'' என்பது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

''கழிவு அல்லது வேறு பருப்பொருள்'' என்பது, ஏதேனும் வகையினவான, வடிவத்தினவான அல்லது விவரணத்திலான பொருட்கள் மற்றும் பதார்த்தங்கள் என்று பொருளாகும்.

### அட்டவணை I

(ஒழுங்குவிதி 2 (ஆ) )

கொட்டுதல் அனுமதிப்பத்திரத்தின்கீழ் கடல்சார் மற்றும் கரையோர இடப்பரப்புகளினுள் அனுமதிக்கப்பட்ட கைத்தொழில் அத்துடன் வீட்டுக் கழிவைக் கொட்டுதல் (பின்வரும் நிலை - அளபுருக்கள் பொறுதி எல்லைக்குக் குறைவாகவிருப்பின் மட்டுமே அனுமதிக்கப்படும்).

கடல்சார் மற்றும் கரையோர இடப்பரப்புகளினுள் நில அடிபடையிலான கைத்தொழில்களிலிருந்தும் ஏனைய மூலவளங்களிலிருந்தும் வெளியேற்றுகை நியமம்.

| இல. | நிலை - அளபுரு | கூறுப் பொறுதி எல்லை | எல்லைப் பெறுமதிகளின் வகை |
|---|---|---|---|
| 1. | மொத்தத் தொங்கும் திண்மம் | mg / 1, max | 150 |
| 2. | பின்வருவனவற்றின் துகள் அளவு :<br>(அ) மிதக்கக்கூடிய திண்மங்கள் | mm / max | 3 |
| | (ஆ) படியக்கூடிய திண்மங்கள் | um / max | 850 |
| 3. | சூழ்திருக்கும் தட்பவெப்ப நிலையில் pH | - | 5.5-9.0 |
| 4. | உயிரிய இரசாயன ஒட்சிசன் தேவை. 100 (ஐந்து நாட்களில் BOD $20^0$ C இல் அல்லது மூன்று நாட்களில் BOD $27^0$ C இல் ) | mg / 1, max | 100 |
| 5. | தட்ப வெப்ப நிலை | $^{\circ}$C, max | வெளியேற்றுமிடத்தில் 45 $^0$ C |
| 6. | எண்ணெயும் மசகெண்ணெய்களும் | mg / 1, max | 20.0 |
| 7. | பெனோலிக் கலவைகள் (பெனோலிக் OH ஆக) | mg / 1, max | 5.0 |
| 8. | இரசாயன ஒட்சிசன் தேவை (COD) | mg / 1, max | 250.0 |
| 9. | மொத்த எஞ்சியுள்ள குளோரீன் | mg / 1, max | 1.0 |
| 10. | அம்மோனியக் நைட்ரோசன் ( N ஆக) | mg / 1, max | 50.0 |
| 11. | சயனைட் (CN ஆக) | mg / 1, max | 0.2 |

**அட்டவணை** I *(தொடர்ச்சி)*

| இல. | நிலை - அளபுரு | கூறுப் பொறுதி எல்லை | எல்லைப் பெறுமதி களின் வகை |
|---|---|---|---|
| 12. | சல்பைட்டுகள் (S ஆக) | mg / 1, max | 5.0 |
| 13. | புளோரைட்ஸ் (F ஆக) | mg / 1, max | 15.0 |
| 14. | ஆர்சனிக்கு (AS ஆக) | mg / 1, max | 0.2 |
| 15. | கட்மியம் (Cd ஆக) | mg / 1, max | 2.0 |
| 16. | குரோமியம் மொத்தம் (Cr ஆக) | mg / 1, max | 2.0 |
| 17. | குரோமியம், ஹெகசவலன்ட் (Cr 6 + ஆக) | mg / 1, max | 1.0 |
| 18. | செம்பு ( CU ஆக) | mg / 1, max | 3.0 |
| 19. | ஈயம் ( Pb ஆக) | mg / 1, max | 1.0 |
| 20. | பாதரசம் ( Hg ஆக) | mg / 1, max | 0.01 |
| 21. | நிக்கல் ( Ni ஆக) | mg / 1, max | 5.0 |
| 22. | செலீனியம் (Se ஆக) | mg / 1, max | 0.1 |
| 23. | துத்தநாகம் (Zn ஆக) | mg / 1, max | 5.0 |
| 24. | பீடைகொல்லிகள் | mg / 1, max | 0.005 |
| 25. | சேதன - பொஸ்பரஸ் கலவை | mg / 1, max | 1.0 |
| 26. | பாசிகை செய்யப்பட்ட ஹைதரோகார்பன்கள் (CI ஆக) | mg / 1, max | 0.02 |
| 27. | மலம்சார் கோலிபோம் | MPN / 100ml. max | 6.0 |
| 28. | கதிரியக்கப் பொருட்கள்<br>(இ) அல்பா உமிழிகள்<br>(ஈ) பீட்டா உமிழிகள் | <br>micro curie/ ml, max<br>micro curie/ ml, max | <br>10- 8<br>10- 7 |

***குறிப்பு*** 1 : வெறுப்பூட்டும் மணத்தையும் நிறத்தையும் செயல்முறைக்குகந்தவரை அகற்றுவதற்கான எல்லா முயற்சிகளும் எடுக்கப்படுதல் வேண்டும்.

***குறிப்பு*** 2 : சுத்தமான ஏற்கும் நீரின் ஆகக்குறைந்த 8 கன அளவுகளின் மூலமேலும் நீர்மக் கழிவுகளைச் செறிவு குறைத்தலை இப்பெறுமதிகள் அடிப்படையாகக் கொண்டுள்ளன செறிவு குறைத்தல் 8 தடவைகளுக்குக் குறைவாகவிருப்பின், அனுமதிக்கத்தக்க எல்லைகள் உண்மையான செறிவு குறைத்தலின் 1/8 றினால் பெருக்கப்படுகின்றன.

**அட்டவணை** II

(ஒழுங்குவிதி 2 (ஆ) (i))

கடலில் கொட்டுவதற்காக உத்தேசிக்கப்படும் தூர்வாரப்பட்ட
பொருட்களுக்கான வண்டல் தர வழிகாட்டுநெறிகள்

| இனம் | பதார்த்தம் | தடைகாப்பு மட்டம் |
|---|---|---|
| **உலோகங்களும் மாழைப்போலிகளும்** | | |
| 1. | அன்டிமனி | 2 mg /kg |
| 2. | ஆர்சனிக்கு | 20 mg /kg |
| 3. | கட்மியம் | 1.5 mg /kg |
| 4. | குரோமியம் | 80 mg /kg |
| 5. | செம்பு | 65 mg /kg |
| 6. | ஈயம் | 50 mg /kg |
| 7. | பாதரசம் | 0.15 mg /kg |
| 8. | நிக்கல் | 21 mg /kg |
| 9. | வெள்ளி | 1.0 mg /kg |
| 10. | துத்தநாகம் | 200 mg /kg |
| **சேதனப் பொருட்கள்** | | |
| 11. | மொத்த PCBC க்கள் | 23 ug /kg |

**அட்டவணை** II (தொடர்ச்சி)

| இனம் | பதார்த்தம் | தடைகாப்பு மட்டம் |
|---|---|---|
| உலோகங்களும் மாழைப்போலிகளும் | | |
| | பீடைகொல்லிகள் | |
| 12. | டீடீடீ | 2 µg /kg |
| 13. | டீடீஈ | 2.2 µg /kg |
| 14. | மொத்த டீடீரீ | 1.6 µg /kg |
| 15. | டீயல்ட்ரின் | 0.02 µg /kg |
| 16. | குளோர்டேன் | 0.5 µg /kg |
| 17. | லின்டேன் | 0.32 µg /kg |
| 18. | என்ட்ரின் | 0.02 µg /kg |
| **பல்லுரு நண்கருக்களுடைய வாசனை ஹைதரோகார்பன்கள்** (PAH கள் ) | | |
| 19. | அசிநப்தீன் | 16 µg /kg |
| 20. | அசிநப்தலீன் | 44 µg /kg |
| 21. | அந்த்ரசீன் | 85 µg /kg |
| 22. | புளோரீன் | 19 µg /kg |
| 23. | நப்தலீன் | 160 µg /kg |
| 24. | பெனன்த்திரீன் | 240 µg /kg |
| 25. | குறைந்த - மூலக்கூற்று - எடை PAH கள் | 552µg /kg |
| 26. | பென்சோ [a] அந்த்ரசீன் | 261 µg /kg |
| 27. | பென்சோ[a] பைரீன் | 430 µg /kg |
| 28. | டைபென்ஸ் [a] அந்த்ரசீன் | 63 µg /kg |
| 29. | புளோரன்த்தீன் | 600 µg /kg |
| 30. | கிரைசீன் | 384 µg /kg |
| 31. | பைரீன் | 665 µg /kg |
| 32. | உயர்ந்த - மூலக்கூற்று - எடை PAH கள் | 1 700 µg /kg |
| 33. | மொத்த PAH | 10 000 µg /kg |
| **மொத்தப் பெற்றோலிய ஹைதரோகார்பன்கள்** | | 550 mg/kg |
| ஏனைய பதார்த்தங்கள் | | |
| 34. | ரேடியோநியூகிலைட்ஸ் | 35 Bq /kg |
| 35. | ட்ரைபியுடைல்ரின் (Sn ஆக) | 9 µg /kg |

அட்டவணை III

(ஒழுங்குவிதி 2 (ஆ) (V)

2 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட பொருட்கள் தவிர, கொட்டுவதற்காக அனுமதிப்பத்திரமொன்று தேவையாகவுள்ள பதார்த்தங்கள்.

1. கீழே நிரற்படுத்தப்பட்ட பருப்பொருட்களின் குறிப்பிடத்தக்க அளவுகளைக் கொண்டுள்ள கழிவுகள் :

1. ஆர்சனிக்கும் அதன் கலவைகளும் ;
2. ஈயமும் அதன் கலவைகளும் ;
3. செம்பும் அதன் கலவைகளும் ;
4. துத்தநாகமும் அதன் கலவைகளும் ;
5. ஓர்கன்சிலிகொன் கலவைகள் ;
6. சயனைட்டுகள் ;
7. புளோரைட்டுகள் ;
8. பெரிலியம், குரோமியம், நிக்கல், வனேடியம் மற்றும் அவற்றின் கலவைகள் ;
9. கடல்நீரில் விரைவாகத் தீங்குவிளைவிக்காததாக்கப்படக்கூடிய தீங்குவிளைவிக்காத பதார்த்தம் அல்லது பதார்த்தங்கள் தவிரக்கப்பட்டு, I ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்படாத பீடைகொல்லிகளும் அவற்றின் துணைப்பொருட்களும்.

2. குறைந்த மட்டக் கதிரியக்கப் பருப்பொருளைக் கொண்டுள்ள கழிவுகள்.

**அட்டவணை III** *(தொடர்ச்சி)*

*3. கடலின் அடிமட்டம் வரை அமிழ்ந்துபோகக்கூடிய சாத்தியம் கொண்டவையும், மீன்பிடித்தலுக்கு அல்லது கடற்செலவுக்குப் பாரதூரமான முட்டுக்கட்டைகளாக அமையக்கூடியவையுமான கொள்கலன்கள், கழிவு உலோகம் அல்லது வேறு பருமனான கழிவுகள்.*

*4. I ஆம் அட்டவணையில் 1 ஆம், 2 ஆம் விடயங்களிற் குறிப்பீடு செய்யப்பட்ட பருப்பொருட்களைக் கொண்டுள்ள கழிபொருள் மண்டிகளும் தூர்வாரப்பட்ட தூர்மண்ணும்.*

**அட்டவணை IV**

*(ஒழுங்குவிதி 3)*

*கொட்டுவதற்குத் தடை செய்யப்பட்ட பதார்த்தங்கள் :*

1. *ஓர்கன்ஹலோஜென் கலவைகள், பாதரசம் மற்றும் பாதரசக் கலவைகள், கட்மியம் மற்றும் கட்மியம் கலவைகள் என்பவற்றைக் கொண்டுள்ளவையும், மேலே நிரற்படுத்தப்பட்ட பருப்பொருளின் சிறிய அளவையே கொண்டனவாகக் கடல்நீரில் விரைவாகத் தீங்குவிளைவிக்காதனவாக்கப்பட முடியுமானவை தவிர்ந்தவையுமான கழிவுகள்.*
2. *உயர்மட்டக் கதிரியக்கக் கழிவுகள் அல்லது வேறு உயர்மட்டக் கதிரியக்கப் பருப்பொருள் ;*
3. *பண்படுத்தப்படாத எண்ணெயும் அதன் கழிவுகளும், சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திப் பொருட்களும், பெற்றோலிய வடிப்பு எச்சப் பொருட்களும் அல்லது அத்தகைய பருப்பொருளைக் கொண்டுள்ள எவையேனும் கலப்புகளும் ;*
4. *கடற்செலவு, மீன்பிடித்தல் மற்றும் வேறு செயற்பாடுகளுடன் பாரதூரமானமுறையில் தலையிடக்கூடிய வகையில் அல்லது கடல்சார் சேதனவுறுப்புகளுக்கு ஆபத்தேற்படுத்தக்கூடிய வகையில் கடலில் மிதக்கக்கூடிய அல்லது கடலில் தொடர்ந்து தொங்கக்கூடிய கம்பி வலைத்தொகுதிகள், கயிறுகள், பிளாத்திக்குகள் அல்லது வேறு செயற்கைக் கூட்டிணைப்புப் பொருட்கள் ;*
5. *இவ்வட்டவணையின் 1 ஆம், 2 ஆம் விடயங்களில் குறிப்பீடு செய்யப்பட்ட பருப்பொருட்களைக் கொண்டுள்ள கழிபொருள் மண்டிகளும் தூர்வாரப்பட்ட தூர்மண்ணும்.*

**அட்டவணை V**

*(ஒழுங்குவிதி 4 (1))*

*கடலில் கொட்டுவதற்கான அனுமதிப்பத்திரத்துக்கான விண்ணப்பப்படிவம்*

**அ. விண்ணப்பகாரரின் விபரங்கள்**

*ஆளின் அல்லது ஒழுங்கமைப்பின் பெயர் :........................................................................................ ............................*
*அவசர நிலைமையின் விடயத்தில் தொடர்புகொள்ளவேண்டிய ஆள் :..........................................................................................*
*முகவரி :.............................................................................................................................................................*
*தொலைபேசி இலக்கம் :....................................................................................................................................*
*தொலைநகல் :.....................................................................................................................................................*
*மின்னஞ்சல் :......................................................................................................................................................*

**ஆ. செயற்பாட்டின் வகை அல்லது கழிவுப் பொருட்களைத் தோற்றுவிக்கும் மூலம் (குறியிடவும்)**

| | |
|---|---|
| *வதிவிடம் :* | |
| *ஹோட்டல் அல்லது சிற்றுண்டிச்சாலை :* | |
| *மீன் பதனிடுதல் :* | |
| *மின்சக்திப் பொறித்தொகுதி :* | |
| *இரசாயனக் கைத்தொழில் அல்லது வேறுவகையினதான கைத்தொழில் (குறித்துரைக்கவும்) :* | |
| *விலங்கு வேளாண்மை அல்லது கைத்தொழிற்சார் செயல்முறைகள் :* | |
| *மீன் வளர்ப்பு :* | |
| *ஏனையவை :* | |

**அட்டவணை V** *(தொடர்ச்சி)*

**இ. கொட்டப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட கழிவின் மூலமும் வகையும்**

மூலம் :........................................................................................................................................................................

அடக்கம் : ......................................................................................................................................................................

களஞ்சியப்படுத்துகையின் அளவும் அமைவிடமும் : ..........................................................................................................

பௌதீகப் பண்பியல்புகளின் விவரணம் : (தயவு செய்து எவையேனும் ஆதாரப்படுத்தும் ஆவணத்தை இணைக்கவும் ) :.......................................................................................................................................................................

இரசாயனப் பண்பியல்புகளின் விவரணம் : (தயவு செய்து பரீட்சிப்பு அறிக்கையை இணைக்கவும் ) :................................................ ..................................................................................................................................

உயிரியற் பண்பியல்புகளின் விவரணம் : (தயவு செய்து பரீட்சிப்பு அறிக்கையை இணைக்கவும் ) :...................................... ...................... .................... ...........................................................................................................

தூர்வாரப்பட்ட பொருளின் வியடத்தில், அதிகாரசபை ஏற்றுக்கொள்ளத்தக்க வண்டல் தர வழிகாட்டு நெறிகளுடன் அது இணங்கியொழுகுகின்றதா?

கலன்களின், மேடைகளின் அல்லது மனிதனினால் ஆக்கப்பட்ட வேறு கட்டமைப்புகளின் விடயத்தில், பின்வருவன எல்லாம் ஆகக்கூடிய அளவுக்கு அகற்றப்பட்டுள்ளனவா?.....................................................................................................

* எண்ணெய்கள் ;
* இரசாயனப் பொருட்களும் வேறு தீழ்ப்பாக்கிகளும் அத்துடன்
* மிதக்கும் கூளமண்ணை உருவாக்குவதற்கு இயன்றதாகவுள்ள எவையேனும் பொருட்கள், அல்லது ;
* கடல்சார் சூழலின் தீழ்ப்பாக்குதலுக்கு வேறுவகையில் உதவுகின்றவை. (ஆதாரப்படுத்தும் ஆவணங்கள், நிழற்படங்கள் முதலியவற்றைத் தயவு செய்து இணைக்கவும்).

**ஈ. உத்தேசிக்கப்பட்ட கொட்டுதல் தொழிற்பாடுகள் :**

கொட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்ட முறை :...................................................................................... ........................................ .................... ........................................

கொட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்ட முறை குழாய்வழி மூலமானதாகவிருப்பின் :........................................ ....................................... ........................................ .................... ........................................

(அ) குழாய்வழியின் விட்டம் : ...................................................................................................................

(ஆ) கரையோரத்திலிருந்து குழாய்வழியின் நீளம் :.....................................................................................

(இ) உத்தேசிக்கப்பட்ட வெளியேற்றுகை வேகம் :.......................................................................................

ஒரு கப்பலிருந்து அல்லது வானூர்தியிலிருந்து அல்லது மேடையிலிருந்து கொட்டுதல் பொறுப்பேற்கப்படுவதற்கு உத்தேசிக்கப்படுமிடத்து :

(அ) பெயர் : ..............................................................................................................................

(ஆ) கொடி : ..............................................................................................................................

(இ) சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்பு (சகஒ) இனங்காணல் அல்லது பதிவிலக்கம் (அல்லது சமமானது) :.........................................................................................................................................

(ஈ) கப்பலின், வானூர்தியின் அல்லது மேடையின் சொந்தக்காரர் :.................................................................

(உ) உத்தேசிக்கப்பட்ட கொட்டுதல் திகதி : (........................................ முதல் ............................................... வரை)

(ஊ) பல்லெண்ணிக்கையினவான கொட்டுதல் நிகழ்வுகளை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்படும் விடயத்தில், ஒவ்வொரு நிகழ்விலும் கொட்டப்படவுள்ள கழிவின் அளவு :............................................................................................

**உ. உத்தேசிக்கப்பட்ட கொட்டுமிடம் :**

அகலக்கோடு மற்றும் நெடுங்கோடு உட்பட அமைவிடம் : (கொட்டுமிடத்தின் பொருத்தமான அளவுத்திட்டப்படத்தை வழங்கவும்) :.............................................................. ...................................................................... .......................................

இந்த இடத்தை முன்மொழிந்தமைக்கான அடிப்படைக் காரணம்/நியாயப்படுத்துகை : ..............................................................
.......................................................................................................................................................................

**அட்டவணை V** *(தொடர்ச்சி)*

நீரின் ஆழம் :.........................................................................................................................................................
மிகக்கிட்டிய தரையிலிருந்தான தூரம் :...............................................................................................................
இடத்திலும் அதற்கண்மையிலும் உயிரியற்சார் சமுதாயங்கள் :.............................................................................
(உ.ம். முருகைக்கற்பார்த் தொடர்கள், கடற்புல முதலியன)
இடத்திலும் அதற்கண்மையிலும் கடற்றொழில் மூலவளங்கள் :.................................................................................
இடப்பரப்பின் ஏலவேயுள்ள பயன்பாடுகள் :.........................................................................................................
.............................................................................................................................................................

**ஊ. எதிர்வுகூறப்பட்ட சூழல் தாக்கங்கள்**

பின்வருவனமீது உத்தேசிக்கப்பட்ட கொட்டுதலின் நேரடியான, நேரடியாகவல்லாத மற்றும் குறுகிய, நீண்ட காலத்தில் எதிர்கூறப்பட்ட தாக்கங்கள் என்ன? .......................................................................................................................

(அ) உத்தேசிக்கப்பட்ட கொட்டுமிடத்திலும் அதற்கண்மையிலும் கடற்படுக்கை வண்டல் தரம் (பௌதீக மற்றும் இரசாயன) :...........................................................................................................................................

(ஆ) உத்தேசிக்கப்பட்ட கொட்டுமிடத்திலும் அதற்கண்மையிலும் நீரின் தரம் (பௌதீக மற்றும் இரசாயன) :...........................................................................................................................................

(இ) உத்தேசிக்கப்பட்ட கொட்டுமிடத்திலும் அதற்கண்மையிலும் உயிரியற் சமுதாயங்கள் :........................................ ............................................................ ..........................................................................................

(ஈ) கொட்டுமிடத்திலும் அதற்கண்மையிலும் கடற்றொழில் மூலவளங்கள் :...................................................................

(உ) இடத்திற்கண்மையில் வணிக/மீன்பிடிக்கல நடமாட்டத்தின் சராசரி அடர்த்தியும் உத்தேசிக்கப்பட்ட கடற்செலவுசார் பாதுகாப்பு ஒழுங்கேற்பாடுகளும் :..........................................................................................................

(ஊ) இடப்பரப்பின் ஏனைய பயன்பாடுகளும் பயன்படுத்துவோரும் : .......................................................................

கொட்டுதலின் ஏதேனும் நிகழ்தகு பாதகமான சூழல் தாக்கங்களைத் தடுப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும், கண்காணிப்பதற்கும் விண்ணப்பகாரர் உத்தேசிக்கும் வழிமுறைகள் பற்றிய விவரங்களை விவரிக்கவும் :.................................................................

இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுத்துதவப்பட்ட விவரங்கள், உண்மையானவையும், செம்மையானவையுமென இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன். இதன்கண்ணுள்ள எவையேனும் விவரங்கள் பொய்யானவையாக அல்லது பிழையானவையாகக் காணப்படின் எனது விண்ணப்பம் மறுக்கப்படுமென்றும், அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருப்பின் இல்லாதாக்கப்படுமென்றும் அறிவேன்.

............................................................
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

...........................................
திகதி :

**அலுவலகப் பாவனைக்கு மட்டும்**

அனுமதிப்பத்திர விண்ணப்ப இல. :

1. விண்ணப்பம் பெறப்பட்ட திகதி :----.
2. பெறப்பட்ட ஆதாரப்படுத்தும் ஆவணங்களின் நிரல் :----.
3. ஏதேனும் மேலதிகத் தகவல் கோரப்படின் அல்லது பெறப்பட்டிருப்பின் :----.
4. கோரப்பட்ட அல்லது பெறப்பட்ட ஏதேனும் முகவர் நிலையத்திடமிருந்தான ஏதேனும் அவதானிப்பின் விவரங்கள் :----.
5. அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாவென்பது : ஆம்/இல்லை.
6. அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்பட்டிருப்பின் :

(அ) அனுமதிப்பத்திர இலக்கம் :----.
(ஆ) வழங்கப்பட்ட திகதி :----.
(இ) செல்லுபடிக் காலப்பகுதி :----.
(ஈ) முடிவுறும் திகதி :----.
(உ) இணைக்கப்பட்ட நிபந்தனைகள் (எவையேனுமிருப்பின்) :----.

**அட்டவணை V** *(தொடர்ச்சி)*

7. அனுமதிப்பத்திரம் மறுக்கப்பட்டிருப்பின், மறுப்புக்கான காரணங்கள்

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பமும் பதவிப் பெயரும் :................................ திகதி :.......................................

**அட்டவணை VI**

(ஒழுங்குவிதி 4 (2))

கட்டணங்கள் :
விண்ணப்பக் கட்டணம் - 1,500 ரூபா
அனுமதிப்பத்திரக் கட்டணம் :

1. வதிவிடத்திலிருந்து வீட்டுக் கழிவுநீரைக் கொட்டுதல் :
5,000 ரூபா (வருடாந்த அனுமதிப்பத்திரம்) .

2. ஓராண்டுக் காலப்பகுதியினுள் ஹோட்டல், சிற்றுண்டிச்சாலை மற்றும் வேறு கைத்தொழில்கள் என்பவற்றிலிருந்து கழிபொருளை மற்றும் கழிவுநீரை அத்துடன் குளிர்நீரைக் கொட்டுதல்.

| | | |
|---|---|---|
| (அ) | 1,0000 கன மீற்றர்களுக்குக் குறைவாக | - 10,000.00 ரூபா |
| (ஆ) | 1,0000 - 50,000 கன மீற்றர்களுக்குக் குறைவாக | - 20,000.00 ரூபா |
| (இ) | 5,0000 - 10,0000 கன மீற்றர்களுக்குக் குறைவாக | - 30,000.00 ரூபா |
| (ஈ) | 10,0000 கன மீற்றர்களுக்குக் குறைவாக | - 50,000.00 ரூபா |

3 தூர்வாரப்பட்ட பொருட்கள், கழிபொருள், மீன்கழிவு அல்லது மீன் பதனிடுதல் தொழிற்பாட்டிலிருந்து விளைகின்ற பொருட்கள் என்பவற்றைக் கொட்டுதல்.

| | | |
|---|---|---|
| (அ) | 5,000 கன மீற்றர்களுக்குக் குறைவாக | - 10,000.00 ரூபா |
| (ஆ) | 5,000 - 10,000 கன மீற்றர்களுக்குக் | - 20,000.00 ரூபா |
| (இ) | 10,000 - 20,000 கன மீற்றர்களுக்குக் | - 30,000.00 ரூபா |
| (ஈ) | 20,000 - 40,000 கன மீற்றர்களுக்குக் | - 50,000.00 ரூபா |
| (உ) | 40,000 கன மீற்றர்களுக்கு மேற்படவும் மேலதிக 1,000 கன மீற்றர்களுக்கும் | - 50,00.00 ரூபா |

4. இயற்கையான மூலத்தினைக்கொண்ட சடத்துவமான, அசேதன புவிவரலாற்றியல்சார் பொருட்களை, அல்லது இரும்பு, உருக்கு, கொங்குறீற்று அல்லது இவற்றையொத்த தீங்குவிளைவிக்காத பொருட்களைப் பிரதானமாகக் கொண்டுள்ள பருமனான இனங்களைக் கொட்டுதல்.

| | | |
|---|---|---|
| (அ) | பொருட்களின் 1,000 கன மீற்றர்களுக்குக் | - 10,000.00 ரூபா |
| (ஆ) | பொருட்களின் 1,000 - 5,000 கன மீற்றர்களுக்குக் | - 10,000.00 ரூபா |
| (இ) | பொருட்களின் 5,000 - 10,000 கன மீற்றர்களுக்குக் | - 20,000.00 ரூபா |

(ஈ) 10,000 கன மீற்றர்களுக்கு மேற்படவும் மேலதிக 1000 கன மீற்றர்களுக்கும் ரூபா 1,000.00.

5. கலன் அல்லது வானூர்தி அல்லது மனிதனினால் ஆக்கப்பட்ட வேறு உலோகக் கட்டமைப்புகள் என்பவற்றைக் கொட்டுதல்.

1. ஓர் இனத்துக்கு - 1,00,000.00 ரூபா.

**அட்டவணை VII**

(ஒழுங்குவிதி 5 (3))

**கடலில் கொட்டுவதற்கான அனுமதிப்பத்திரம்**

2008 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, கடல்சார் தீழ்ப்புத் தடுப்புச் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டது.

அனுமதிப்பத்திர இலக்கம் : ........................................................................................................

**அ. அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரின் விவரங்கள் :**

1. ஆளின் அல்லது ஒழுங்கமைப்பின் பெயர் :..................................................................................
2. முகவரி :...........................................................................................................................
3. தொலைபேசி இல. :...............................................................................................................
4. தொலைநகல் :......................................................................................................................
5. மின்னஞ்சல் :.....................................................................................................................

**அட்டவணை V** *(தொடர்ச்சி)*

**ஆ. கொட்டுவதற்கு அனுமதிக்கப்பட்ட கழிவின் வகை :**

6. மூலம் :..................................................................................................
7. அடக்கம் :..................................................................................................
8. அளவு :..................................................................................................
9. விவரணம் :..................................................................................................

**இ. அனுமதிக்கப்பட்ட கொட்டுதல் தொழிற்பாடுகள் :**

10. கொட்டுவதற்கு அனுமதிக்கப்பட்ட முறை :..................................................................................................
11. கொட்டுவதலானது கலன், வானூர்தி அல்லது மேடை ஒன்றிலிருந்து (தோதானவாறு நீக்கிவிடுக) பொறுப்பேற்கப்படவிருப்பின் :

(அ) பெயர் :..................................................................................................
(ஆ) கொடி :..................................................................................................
(இ) சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்பு (சகஒ) இனங்காணல் அல்லது பதிவிலக்கம் (அல்லது அதற்குச் சமமானது) :..................................................................................................
(ஈ) எந்தக் கலத்திலிருந்து, வானூர்தியிலிருந்து அல்லது மேடையிலிருந்து கொட்டுதல் அனுமதிக்கப்படுகின்றதோ அந்தக் கலத்தின், வானூர்தியின் அல்லது மேடையின் (தோதானவாறு நீக்கிவிடுக) சொந்தக்காரர் :..................................................................................................

12. கொட்டுதல் அனுமதிக்கப்படும் திகதிகள் அல்லது நேரம் அல்லது காலஎல்லை (முதல்/வரை) :..................................

**ஈ. கொட்டுதல் செயற்பாட்டுக்காக ஒரு குழாய்வழி பயன்படுத்தப்படின் :**

(அ) குழாய் வழியின் விட்டம் :..................................................................................................
(ஆ) குழாய் வழியின் நீளம் :..................................................................................................
(இ) ஆகக்கூடிய வெளியேற்றுகை வேகம் :..................................................................................................

**உ. செல்லுபடிக் காலப்பகுதி :**

13. இவ்வனுமதிப்பத்திரம் ............................... ஆந் திகதியிலிருந்து....................... ஆந் திகதி வரை செல்லுபடியாகுமென்பதுடன், அதன்கண் குறித்துரைக்கப்பட்ட திகதியன்றுதவிர.............................. ஆம் இலக்க இவ்வனுமதிப்பத்திரத்தின் கீழ் கொட்டுதல் நிறைவேற்றப்படலுமாகாது.

**ஊ. கொட்டுதல் பற்றிய அறிக்கை/சான்றிதழ் :**

14. கொட்டுதல் தொழிற்பாடு பூர்த்தி செய்யப்படுவதன் மேல் அல்லது கொட்டுதல் செய்முறை முப்பது நாட்களுக்கு மேற்படத் தொடர்ந்திருப்பின், விடயத்துக்கேற்ப, பூர்த்தி செய்யப்படுவதன் மேல் அல்லது அடுத்த மாதத்தின் 10 ஆம் திகதிக்கு முன்னர் கொட்டுதல் பற்றிய அறிக்கை அதிகாரசபையிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

கடல்சார் சூழற் பாதுகாப்பு அதிகாரசபையின் பொதுமுகாமையாளரினால்/ அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் அங்கீகரிக்கப்பட்டது.

கையொப்பம் :........................................... பதவிப் பெயர் :.......................................... ஆந் திகதி :...............................

அதிகாரசபையின் அலுவலகமுறையான இலச்சினை அல்லது முத்திரை

அனுமதிப்பத்திரத்தின் நியதிகளும் நிபந்தனைகளும்.

1. இவ்வனுமதிப்பத்திரம் கைமாற்றப்படற்பாலதல்ல.
2. அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.
3. அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் பின்வருமாறு செய்துள்ளாரென அதிகாரசபை திருப்திப்படின் இவ்வனுமதிப்பத்திரத்தை இடைநிறுத்துதல் அல்லது இல்லாதாக்குதல் அதற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) இவ்வொழுங்குவிதிகளினால் புரிவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட பணிகளையும் கடமைகளையும் நிறைவேற்றத் தவறியமை ; அல்லது

(ஆ) ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறியமை

## *அட்டவணை* VIII

(ஒழுங்குவிதி *8 (4)*)

கொட்டுதல் தொழிற்பாடு பூர்த்தி செய்யப்படுவதன்மேல், அல்லது அதிகாரசபையினால் குறித்துரைக்கப்பட்டவாறாகக் காலத்துக்குக்காலம், ஒவ்வோர் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரும், அதிகாரசபையிடம் அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், அது பின்வரும் விவரங்களைச் சுட்டிக்காட்டுதலும் வேண்டும்.

*1.* அனுமதிப்பத்திர இலக்கமும் வழங்கப்பட்ட திகதியும் :

*2.* கொட்டுதலில் சம்பந்தப்பட்டுள்ள கலனின் அல்லது வானூர்தியின் தலைவரின் பெயர் :

*3.* உண்மையாகக் கொட்டப்பட்ட பொருளின் தொகையும் கொட்டுமிடத்தின் திட்டவட்டமான அமைவிடமும்.

*4.* அனுமதிப்பத்திர நிபந்தனைகளிலிருந்து விலகியுள்ளவொரு விடயத்தில் குறிப்புகளும் விளக்கங்களும்.

5. அனுமதிப்பத்திர நிபந்தனைகளின் கீழ் கோரப்பட்ட மேலதிக விவரங்கள் :

.............................................................
அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரின்
கையொப்பம்.

..................................
திகதி.

*7 - 388*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.